தென்மொழி

பகட்டாரவாரத்தில்
மெய்மறக்கும் தமிழா!

மக்கள் பணிசெய்ய
'மாண்புமிகு' ஆனவர்கள்
எக்களிப்பாய் ஏற்றமுறச்
செய்யுங் கலியாணம்!

வழியெல்லாம் வாழைமரம்
வண்ணமிகு கோலம்
பொழியும் விளக்கொளியில்
பொங்குதடா மெய்ச்சீர்த்தி!

விண்முட்ட நிற்கின்ற
வெவ்வேறு வெட்டுருக்கள்
அண்ணாந்து பார்க்க
அடங்காச் சிறப்படடா!

எட்டுத் திசையும்
எதிரொலிக்கு மாறாங்கே
கொட்டு முழக்கமவர்
கொள்ளைப் பெருமையன்றோ!

பக்கமெல்லாம் நீண்டகன்ற
பந்தலில் கூடியங்கே
எக்காளம் ஊதலவர்
ஏப்பமிடும் ஓசையன்றோ!

மூடநெய் பெய்த
முதிர்சுவை உண்டிஅவர்
கூடவிருந் துண்ணக்
கொடுத்துவைத்தார் எத்தனைபேர்!

பண்ணியங்கள் தஞ்சுவையைப்
பன்னி யுரைப்பதற்கு
எண்ணம் இருந்தாலும்
ஏட்டில் இடமேது?

'மொழி'யும் இருநூறு
கோடியென்பார் இன்னும்
கழிகின்ற கோடிக்
கணக்கெல்லாம் யாரறிவார்!

தொண்மணியும் பொன்னிழையும்
தொக்க நகைமறைக்கும்
பெண்மணியின் மேனிப்
பெருமதிப்புக் கோடியென்பார்!

மின்னும் பகட்டொளியில்
மெய்மறந்த எந்தமிழா
உன்னுந் திறத்தால்
உயர்வடைவ தெக்காலம்!

– இறை

சுவடி : 27
ஓலை : 11

விலை
உருபா : 4.00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சிறப்பு மடல்

அம்மா!

அப்பாவை நெஞ்சிலேந்திய அனைவர்க்கும் வணக்கம்!

இம்முறை என்னை வழியனுப்ப வந்திராத நம் தெய்வத்தை எண்ணித் தேடினேன். அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்ட அச் சென்னை மாநகரைச் காரிருள் சூழவே, கடந்தேன். அதன்பின் பலவாறான எண்ண மோதல்கள் என்நெஞ்சில் தோன்றின. இதுவரை உணர்ந்திராத எண்ணச் சிதறல்கள். இயற்கையினுள் கலந்துவிட்ட நம் ஆருயிரை, மீமிசை வானுக்குள் நுழைந்து தேடினேன். நிலத்தையும் கடலையும், ஏன் மரம் செடிகொடிகளையும் விட்டுவிட்டு மாந்த உயிர்களே இல்லாத அந்த உயர்வானுக்குள் நம் ஆருயிர் சென் றிருக்குமோ என்று அலைந்தேன்.

கதிரவனும் முகிற்கூட்டங்களும் மலைகளும் வானுங்கூட மிக எளியனவாக வானூர்தியில் என் கண்களுக்குப் புலப்பட, 'இப் புடவியில் எதுவும் எமக்குப் பெரிதில்லை எம் தந்தையாரைத் தவிர' என்று, எவற்றினும் மனம் வீழ்ந்திடாது இயல்புடன் ஊரை யடைந்தேன். விரும்பியிருந்த எம் வாழ்வில்லத்திற்குள் வெறுமை யுணர்வோடு நுழைந்தேன். என் தந்தை உருவைத் தாங்கிய தென்மொழியைக் கண்டேன். மன இறுக்கம் சிறிது உருகி அத் தென்மொழியைக் கட்டிப் பிடித்துக் கொண்டது.

என் தந்தையார் நம்மைவிட்டுப் போய்விடவில்லை; நம் முடனேயே இருக்கின்றார் என்ற வன்குரல் என்னுள் ஒலித்துக் கொண்டே இருப்பதை உணர்கிறேன். ஆனால், அவர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றார். அங்ஙனம் அவர் ஓய்வுநிலைக்குச் செல்ல வில்லையாயின் நாம் நம் துயிலிலிருந்து எழப்போவதில்லை என்று தான் இயற்கையும் எண்ணியிருக்கும். அவர் தம்முடைய கடமைகளை நாட்டிற்கும் நமக்கும் செய்துவிட்டார். நாம் என்ன செய்தோம்? என்ன செய்யப்போகிறோம்?

எஞ்சியிருக்கும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டாமா? நாமெல்லாம் தப்பித்துவிட்டோம் என்று இறுமாப்புக் கொண்டு விட்டோமா? இல்லையே!பின் ஏன் அழ வேண்டும்?

அவர் உண்மையிலுமே இல்லாமற் போய்விட்டாரா? இல்லை! இல்லவே இல்லை! பின் அவரின் உயிர் எங்கே ? வாருங்கள்... புரட்டுவோம், அவர் எழுதிய அத்தனை நூல்களையும்! அவரின் உயிர் அவர் வரிகளில் ஊடுருவி நனைந்து பசுமையோடு இருக்கின்றன! அந்த வரிகள்தாம் எத்துணை ஆழம் வாய்ந்தவை! உண்மை உணர்வுகள் இனிய மெய்ச்சொற்களாய்த் தெறித்து விழுந்திருக்கின்றன! அவரை நாம் கண்டுகொண்டே இருக்கிறோம்!

அவர் உயிரோடு இருந்தபோது அவரை நேரிலே கண்டு கொண்டும், காணாது ஒளிந்து கொண்டும், அவர் வரிகளைத் துய்த்தும் பிய்த்தும், நூல்களைத் தொட்டும் தொடாமலும் கவனத்தின் ஒரு புறத்தே வைத்துக்கொண்டு கவனியாததுபோல் இருந்து கொண்டும் இருந்திருந்த அந்த அரைகுறை உணர்வுகளை உதறியெறிந்துவிட்டு அவர் காட்டிய மெய்ந்நெறியில் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வோம்!

– செந்தாழை ஆறிறைவன், தூசான் (அமெரிக்கா)

நெருப்பாற்றில் எதிர் நீச்சல்!

நான் மறைந்த பின்தான் – என்
நன்மை வாழ்க்கை தெரியும்!
வான் விரியப் புகழ்வார் – வெறும்
வாயரற்றிப் பொழிவார்!

கத்திக் கத்திச் சொன்ன – என்
கருத்தைத் தேடி அலைவார்!
பொத்தகங்கள் ஆய்வார் – வெறும்
புகழ்ச்சிக் கூரை வேய்வார்!

எழுதி எழுதிப் போட்ட – என்
எழுத்தை யாவும் தேடிப்
பழுதில் லாமல் பதித்து – பெரும்
பணங்கள் திரட்டி வாழ்வார்!

பட்டி மன்றம் கூட்டி – என்
பாவும் கருத்தும் தேறி
வெட்டிக் கதைகள் பேசி – பல
வேடிக்கைகள் செய்வார்!

நினைவில் நிற்க வேண்டி – என்
நிழற் படங்கள் சிலைகள்
புனைவு விழாக்கள் பலவும் – சிலர்
பொழுது போக்க உதவும்!

ஆர வாரம் செய்து – நான்
அப்படி இப்படி என்று
நேரம் கொன்று வாழ்வார் – என்
நிழலைப் பிடிக்க முயல்வார்!

உண்மை தேடி அலைந்தேன் – உயர்
உள்ளம் காண முயன்றேன்
கண்கள் இருண்ட தல்லால் – இரு
காலும் சோர்ந்த தல்லால்,

வெண்மை முடிகள் எய்த – உடல்
விறகு போல வற்றப்
பெண்மை ஆண்மை வடிவில் – பல
பிறவி உருவம் கண்டேன்!

மெழுகைப் போன்ற உடலார் – புது
மெருகு கூட்ட அலைவார்;
கழுகைப் போன்ற நோக்கர் – பல
கயமை செய்து வாழ்வார்!

மானம் நாணம் பாரார் – திரை
மறைவில் சூழ்ச்சி செய்வார்!
கூனல் தாங்கிப் போன – ஏழைக்
கூட்டம் நொந்து சாகும்!

என்னை விரும்பி னோர்கள் - பின்
என்னை வெறுத்த பேர்கள்,
முன்னை அன்பு காட்டி - என்
முதுகில் குத்தி யோர்கள்,

பன்னிப் பன்னிப் பேசி - உயிர்
பழகப் பழகக் கூடித்
தன்னை உயர்த்திக் கொண்டார் - எனும்
தாழ்ச்சி வரிசை நீளும்!

பொய்யும் புளுகும் சொல்லி - என்
புரைகள் பெருகப் பண்ணி,
எய்யும் பொருள்கள் பெருமை - என
யாவும் மிகுத்துக் கொள்வார்!

தொண்டு தொண்டு என்றே - என்
வாழ்வைத் தொலைத்துக் கொண்டேன்!
பெண்டு பிள்ளை எல்லாம் - என்
பிழைப்பைக் கண்டு தூற்றும்!

மொழியும் இனமும் நாடும் - முன்
இழந்த உரிமை மீள - நல்
வழியும் கண்டு சொன்னேன் - நாய்
வாலும் மதிக்க வில்லை!

என்னைக் கொன்று கொண்டேன் - இவ்
வினத்தை மீட்க நின்றேன்!
சின்னத் துணையும் இல்லை - ஒரு
சிறிய உதவி இல்லை!

தன்னந் தனிய னானேன் - என்
தாயும் இரக்கப் பட்டாள்!
முன்னில் வணங்கிச் சென்றார் - என்
முதுகுப் புறத்தில் மென்றார்!

இழித்துப் பேசி எழுதி - எனை
இகழ்ந்து தூற்றி நின்றார்!
சுழித்த நெருப்பின் ஆற்றில் - எதிர்
நீச்சல் அடித்துச் சோர்ந்தேன்!

விலைக்குப் பேச வந்தார் - என்
    கொள்கை விடுக்கச் சொன்னார்!
வலைக்குள் வீழ வைத்தார் - என்
    வாயைக் கட்டச் சொன்னார்!

கட்சிக் கூண்டில் அடைக்க - என்
    கருத்தை மாற்றக் கேட்டார்!
முட்சி தர்ந்த தடத்தில் - எனை
    முடுகி நடக்கச் சொன்னார்!

உதவிக் காக எண்ணி - என்
    உளத்தை மறைக்கச் சொன்னார்!
பதவிக் காக வென்றே - என்
    பணியை மாற்றக் கேட்டார்!

தமிழை எங்ஙன் மறப்பேன் - தமிழ்
    இனத்தை எங்ஙன் தவிர்ப்பேன்!
குமிழ்க்கும் நாட்டின் உரிமை - என்
    குலையில் துடிப்பே அன்றோ!

என்னைப் புகழ வேண்டாம் - என்
    எழுத்தை மதிக்க வேண்டாம்!
கன்னல் தமிழை யன்றோ - நான்
    காத்துக் கொள்ளச் சொன்னேன்!

இனத்தை நாட்டை மீட்க - ஓர்
    எழுச்சி வேண்டும் என்றேன்!
மனத்தை மானப் தன்னை - உடன்
    மாய்த்துக் கொள்ளச் சொல்வார்!

மூச்சைத் தவிர்க்கச் சொன்னால் - ஒரு
    நொடியில் மூச்சை முடிப்பேன்! - என்
பேச்சை மாற்றச் சொன்னால் - என்
    பிறப்பை மாற்ற வேண்டும்!

- பாவலரேறு

தமிழ்ச்சிட்டு குரல் : 20, இசை : 2

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நம்முச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமுச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி : 27) தி.பி.உ0உக – மடங்கல் (செப்த்–'95) (ஓலை 11)

மீண்டும் கவர்ச்சி அரசியலா...?

தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் மீண்டும் ஒரு சரிவு நிலைக்குக் கால்கோள் செய்யப்பட்டு வருகிறது!

தமிழ்மக்கள் தக்கவர்களை இனங்கண்டு போற்றுவதில் தவறாமல் தவறு செய்பவர்கள் என்பது பதிவான ஒன்று. தம் இனத்தவர்கள் அல்லாதவர்களை வரவேற்பதிலும் வணங்கி மகிழ்வதிலும் அவர்கள் கூறுவதை மறைமொழியாகப் போற்றிக் கடைப்பிடிப்பதிலும், அவர்களை உயர்த்திப் பிடித்துத் தலைவர்களாக ஏற்றுக் கொள்வதிலும் காட்டும் ஆர்வத்தையும் அக்கறையையும், தம் இனத்தைச் சார்ந்த அறிஞர்களிடமோ சிந்தனையாளர்களிடமோ காட்டுவதில்லை!

மற்ற மாநிலங்களிலெல்லாம் மண்ணின் மைந்தர்கள் ஆளுமைபெற்றுத் தலைநிமிர்ந்து நிற்கையில் தமிழ்நாட்டில் மட்டும் அயலவர்களுக்கு நடைபாவாடை விரித்து ஆட்சிக் கட்டிலை அணியப்படுத்தித் தருவது வாடிக்கையாகத் தொடர்கிறது.

திரைப்பட நடிகர்கள் அத்துறையில் தாம் பெற்ற விளம்பரத்தையும் சாய்காலையும் திசைமாற்றிப் பயன்படுத்தி அரசியலில் ஆளுமை பெறுவதும், இங்குள்ள பதவி அதிகார வெறியும் கொள்ளை நோக்கமும் கொண்ட பதடிகள் சிலர் அவர்கட்குத் துணைநின்று தூக்கி விடுவதும் வழக்கமாகிவிட்டன.

கன்னடத்தைத் தாய்மொழியாகவும் கருநாடகத்தைப் பிறப்பிடமாகவும் கொண்ட இரசினிகாந்து, தமிழ்நாட்டுத் திரைத்துறையில் காலூன்றித் தம் கிறுக்குத்தனமான நடிப்பு நடவடிக்கைகளால் இளஞ்சிறுவர்களை ஈர்த்து மீநிலை நடிகராக உயர்ந்து இன்று அரசியலில் அடிவைத்துப் பெரும்புள்ளியாகி யிருக்கிறார்- ஆக்கப்பட்டிருக்கிறார்.

இங்குள்ள கையாலாகாத கட்சிகள் சில, அவரை வைத்துத் தம் கட்சிகட்கு வலுச் சேர்த்துக் கொள்ளலாம், வெற்றிதேடிக் கொள்ளலாம் என்னும் நயப்பாசையால் அவரைச் சுற்றி வருகின்றன.

'யார் ஆண்டால் என்ன- நமக்கு ஒரு பதவி கிடைத்தால் போதும்' என்று கருதுகிறவர்கள் அவரைக் கொம்புசீவிவிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வேறு மாநிலங்களில் அம்மாநிலத்தவரைத் தவிர அயலவர் எவரும் ஆட்சியைக் கைப்பற்றமுடியுமா? குறைந்த பக்கம் சட்டமன்ற உறுப்பினர்களுள் ஒருவராகவாவது அயலவர் ஒருவரை அம்மாநில மக்கள் தேர்ந்தெடுக்கும் நிலை உண்டா? அங்கெல்லாம் வாழும் தமிழர்கள் அளவற்ற அல்லல்களுக்கும் அவலங்களுக்கும் ஆளாகிறார்கள் என்றால் அதற்குக் கரணியம் அவர்கட்காக வலுவான குரல் கொடுக்கத் தமிழ்நாட்டில் திறமான தமிழர் எவரும் ஆட்சியில் இல்லை-- இருக்கும் சூழ்நிலையில்லை என்பது தானே தவிர வேறென்ன?

'நான் ஒரு பார்ப்பாத்திதான்' என்று சட்டமன்றத்திலேயே திட்டவட்டமாகத் தெரிவித்த அம்மை செயலலிதா அது முற்றிலும் உண்மை என்பதை இன்று இடஒதுக்கீட்டுத் துறையிலும் மெய்ப்பித்துவிட்டார்.

உத்திரப் பிரதேசத்தில் அம்மாநில அரசு பெரியார் விழா நடத்துவதை- இலட்சுமணபுரியில் பெரியார் சிலை நிறுவுவதைப் பாரதீய சனதாக் கட்சி ஏற்கவில்லையென்கிறார் அக்கட்சியின் தலைவர் அத்துவானி. இதற்கும் மேலாக, தமிழீழத்தில் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்படுவது தொடர்ந்து கொண்டே உள்ளது.

இவற்றிலெல்லாம் அக்கறை செலுத்தாதவர்கள், போராட முன்வராதவர்கள், ஒரு கண்டனம்கூடத் தெரிவிக்காதவர்கள் எப்படியாவது ஆட்சிக்கு வந்துவிட வேண்டும் என்பதற்காக எத்தகைய நடவடிக்கைகளுக்கும் முற்படுகிறார்கள் என்றால் அவர்களாலெல்லாம் நாட்டுமக்களுக்கு என்ன நன்மை கிட்டிவிடும்?

ஆட்சிப்பொறுப்பில் இருப்பவர்கள் அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தியும் அதன் பாதுகாப்போடும் கோடி கோடியாகச் சுருட்டிக் கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்த மறைபொருள்!

ஐயுறவுக்கிடமில்லாத பொருளியல் குற்றவாளிகள், குமுகாயக் கேடர்களெல்லாம் அரசின் அரவணைப்பில் மிதந்து கொண்டிருப்பது நாடறிந்த உண்மை!

எந்த ஓர் அலுவலகத்திலும் கையூட்டு இல்லாமல் ஒரு சிறு தாளும் இயல்பாகவும் முறையாகவும் அசையவே அசையாது என்பது ஏறத்தாழ எழுதப்படாத சட்டமாகிவிட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. கையூட்டுப் பெற்றாலும் செயல்பபடுபவனே 'நேர்மையாளன்' என்ற நிலை உருவாகிவிட்டது.

காவல்நிலையம் என்றால் அது 'மாமூல்' மடம் என்பது மட்டுமன்று; கற்பழிப்புக் கூடம், கொலைக் கூடம் என்று பள்ளிச் சிறுவர்களுக்கும் வெளிப்படையாகத் தெரிந்திருக்கின்றது.

ஆட்சியாளர்களுக்கு எதிராகச் செயல்படுகின்ற கரணியத்தால் வழக்கறிஞர்கள் முதல் செய்தியாளர்கள் வரை ஆளுங்கட்சிக்காரர் களின் வன்முறைக்கு மட்டுமன்று காவல்துறையினரின் கண் மூடித்தாக்குதல்களுக்கும் ஆளாகிறார்கள். அறமன்ற நடுவர்களுங்கூட தம்மைப் பாதுகாத்துக் கொள்வது பெரும்பாடாக இருக்கிறது!

நாட்டில் நடக்கும் கொடுமைகளை, அரசு செய்யும் அட்டூழியங்களைச் சுட்டிக்காட்டி அறிவுரைத்தாலோ மக்களை விழிப்படையச் செய்ய முற்பட்டாலோ, அவ்வாறு செய்யும் அறிஞர்கள், பொதுநலத் தொண்டர்கள் மீது எத்தனை யெத்தனைப் பொய்வழக்குப் போட்டு அவர்களை எப்படி யெல்லாம் அலைக்கழிக்கிறது அரசு!

இவ்வாறெல்லாம் ஆட்சியாளர்களும் ஆளுங்கட்சிக்காரர்களும் அவர்கட்குப் பின்புலமாக இருப்பவர்களும் அன்றாடம் நடத்தும் கொடிய வன்முறைகள் பெருகிக் கிடக்கையில் இவற்றைப் பற்றியெல்லாம் ஒருசிறிதும் வாய்திறக்கமாட்டாத இரசினிகாந்து நாட்டில் வெடிகுண்டு வன்முறை பெருகிவிட்டது என்றும், அது

பஞ்சாப் மாதிரியல் ஒடுக்கப்பட வேண்டும் என்றும் குரல் கொடுக்கிறார் என்றால், அது பொதுநல அக்கறையுடையவர், குமுகாயப் பொறுப்புடையவர் எழுப்பும் குரலாக இருக்கமுடியுமா?

வெடிகுண்டு வன்முறைகள் பெருகக் கரணியமானவர்கள் யார்? அவர்களை எந்த மாதிரியில் ஒடுக்குவது என்று அவர் எடுத்துரைக்க வேண்டாமா? அப்படி எடுத்துரைக்காததே அவர் எவருடைய நலனில் அக்கறையுடையவராக இருக்கிறார் என்பதைக் காட்டுகிறதே!

இத்தகையவர்கள் எந்த நிலையில் ஏற்றிவைக்கப்பட்டாலும் அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்கள் சிலரும் அவர்களுக்கு வால் பிடிப்பவர்கள் சிற்சிலரும் வளமும் பாதுகாப்பும் பெற்று மதர்த்து வாழ முடியுமே தவிர, ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கு உருப்படியாக எந்த ஒரு சிறுபயனையும் விளைவித்துவிட முடியாது என்பது ஒருதலை!

தமிழ் மக்கள் 'சிறியன' சிந்தித்துக் குறியின்றிப் போராடித் தமக்குத் தாமே இழிவையும் இன்னல்களையும் பெருக்கிக் கொள்ளும்நிலையைக் கைவிட்டு, வரலாற்று வழுக்கல்களை எச்சரிக்கையாகக் கொண்டு நீண்ட நெடிய சிந்தனையோடு செயல்பட்டால் மட்டுமே எதிர்காலத்திலாவது தலையெடுக்க முடியும்; தன்னுரிமையோடு வாழமுடியும்.!

— இறை

பாவலரேறு சிறப்பு மலர்

பாவலரேறு ஐயா அவர்களின் பிறந்தநாளை யொட்டி ஒவ்வோர் ஆண்டும் கும்பம் இறுதியில் (மார்ச்சு 10 ஆம் நாள்) தென்மொழி சிறப்பு மலர் வெளியிடப்பெறும். அதன் முதல் மலர் திபி2027 கும்பம்(1996 மார்ச்சு) வெளிவருகிறது.

மலர் அமைப்பிற்குக் குழு ஒன்று அமைந்து இயங்கும். முதல் மலரில் பல நினைவுக்குறிப்புகளும், ஒளிப்படங்களும் வெளிவர உள்ளன. அன்பர்கள் தங்களிடமுள்ள பழைய அரிய குறிப்புகளையும் ஒளி படங்களையும் மே/பா தென்மொழி சென்னை-5 என்ற முகவரிக்கு அனுப்பியுதவுமாறு வேண்டுகிறோம். தென் மொழியில் இடம்பெற அனுப்பியிருந்த ஐயா அவர்களைப் பற்றிய அன்பர்களின் பாடல்கள் படைப்புகள் அனைத்தையும் இதழில் முழுமையாக வெளியிட இயலவில்லையாதலால் அவை மலர்க் குழுவிடம் ஒப்படைக்கப்பெறும்.

படைப்பாளர்கள் எதிர்வரும் முதல் மலருக்கான படைப்புகளை இப்போதிருந்தே **பாவலரேறு நினைவு மலருக்காக** என்று குறித்து அனுப்பத் தொடங்கலாம்.

மலர் அமைப்பு பற்றிய அன்பர்களின் கருத்துகள் வரவேற்கப் படுகின்றன.

— **தென்மொழி**, சென்னை - 5.

நூறாசிரியம்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

பாட்டு : 67

எக்கர் இடுமண லொக்க உலகத்துப்
புக்காங்கு வாழ்ந்து பொன்றுநர் பலரே
அளிதவர் பிறப்பே எளிதவர் நிலையே
ஒளிதக உட்கிளர்ந்து மாணா வினையற
பழிசெய் பளிலத் திரங்கித் தம்முயிர்
அரிதின் மாய்த்த பெரியோர் சிலரே
யாண்டவர் பிறந்தவ ராயினும் மாண்டக
வையத் தவர்வா ழுநரே
உய்யுநர் என்போர் அவர்வழி யோரே!

பொழிப்பு :

இவ் வுலகின்கண் பிறந்து வாழ்ந்து இறப்போர் (யாறு குவித்த எக்கரிடத்து மணல் போல எண்ணற்றோராவர். அவர்தம் பிறப்பு இரங்கத் தக்கது. வாழ்க்கை நிலையோ எளிமை யுடைத்து அவர்களுள் மெய்யறிவு பொருந்துதலால் உள்ளம் எழுச்சியுற்று, இழி செயல்களின் நீங்கப் பெற்றுச் சான்றோரால் பழிக்கப்படுவனவற்றைச் செய்யும் மக்கள் தொகுதியின் இழிநிலைக்கு இரக்கமுற்று அம்மக்களைக் கடைத்தேற்றுதற்குத் தாம் மேற்கொண்ட அருமுயற்சியிலே தம்மை மாய்த்துக் கொண்ட பெருமக்கள் மிகச்சிலராவர். அவர்கள் யாண்டுப் பிறந்தவ ராயினும் இவ் வுலகின்கண் என்றென்றும் சிறப்புற வாழ்ந்து கொண்டிருப்பவராவர். வாழ்க்கையில் ஈடேறுவோர் என்று சொல்லப் பெறுவோர் அப் பெருமக்களின் வழியைப் பின்பற்று வோரேயாவர்.

விரிப்பு :

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

உலகத்துப் பிறந்து வாழ்ந்து இறப்போர் எண்ணற்றோராயினும் அவர்களுள் மெய்யறிவான் மேம்பட்டுச் செய்வினையாற் சிறப்புடைய

ராய், மக்களைக் கடைத்தேற்றும் அருமுயற்சியை மேற்கொண்டு தம் உயிரையும் மாய்த்துக் கொண்ட மிகச்சிலராகிய பெருமக்கள் எங்குப் பிறந்தவராயினும் இவ்வுலகின்கண் என்றென்றும் வாழ்வோர் என்றும் அவர்தம் மெய்ந்நெறியைப் பின்பற்றுவோரே வாழ்க்கையில் ஈடேறுவோர் என்றும் விளக்குவது இப்பாட்டு.

உரை : புலவர் இறைக்குருவனார்

புக்கு ஆங்கு: புகுந்து. புகுதல் - பிறத்தல். இவ்வுலகிற் புதுவதாக வந்தடைதலின் புகுதல் எனப்பட்டது. புலம்பன் உடல்தாங்கி வருதல் எனினுமாம். ஆங்கு- அசை.

எக்கர் இடுமணல்: யாறு அலையான் எற்றிக் குவித்த மணல். யாறு இடு எக்கர் மணல் எனக் கூட்டுக! யாறு வருவிக்கப்பட்டது.

பொன்றுநர்: இறப்போர்.

பலர் : எண்ணற்றோர். இதனையுணர்த்தற்கு எக்கர் மணலை உவமை கூறினார்.

அளிது அவர் பிறப்பு: அவர்தம் பிறப்பு இரங்கத் தக்கது. வாழ்க்கைப் பயனைப் பெற்று ஈடேறுதலின்றி வறிதே கழிதலின் பிறப்பு இரங்கத்திற்குரியதாயிற்று.

எளிது அவர்நிலையே : அவர்தம் வாழ்க்கை நிலையோ எளிமை யுடைத்து. செயற்கு அரியன செய்யாது எளியன செய்தலால் அவர்தம் வாழ்க்கை நிலை எளிமையுடையதாயிற்று.

"செயற்கு எளியவாவன; உலகத் தொழில் செய்தலும் பொரு ளீட்டுதலும் இன்பந்துய்த்தலும் எளியாரை வாட்டுதலுமாம்." என்ப.

ஒளி தக : அறிவுபொருந்த ஒளி சிறப்பாக மெய்யறிவைக் குறித்தது. தக: -தக்கிருக்க - பொருந்த

உள் கிளர்ந்து : மன எழுச்சியுற்று. அஃதாவது அறியாமையால் பழிப்படுவன செய்து இழியும் மக்கள் கூட்டத்தின்பால் கொண்ட இரக்கத்தால் அம்மக்களைக் கடைத்தேற்ற விழைதலால் எழுந்த உணர்வு.

மாணா வினை அற: நற்குண நற்செயல்களுக்கு மாறான இழிசெயல்களைச் செய்யாது நீங்க.

பழி: சான்றோரால் பழிக்கப்படுவன. முதனிலைத் தொழிலாகு பெயர்.

பஃறிலம்: மக்கள் தொகுதி. பஞ்ஞிலம் என்னுஞ் சொல் தொக்குப் பஃறிலம் என நின்றது.

அரிதின்: அரிய வினைப்பாட்டின்கண். தந்நலந் தவிர்த்துப் பொதுநலங் கருதிச் சான்றோர் மேற்கொள்ளும் வினை அருவினை யாதலின் அதனை அரிது என்றார்.

தம் உயிர் மாய்த்த : தம் உயிரை மாய்த்துக் கொண்ட பொதுநலத் தொண்டில் உள்ளம் ஒன்றி ஈடுபடும் பெருமக்கள் தாம் மேற் கொண்ட வினையிலேயே அழுந்தி பலதலையான இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு, மனக் கவலையிலும் மெய்வருத்தத்திலும் உழன்று, உயிர் வாழ்க்கைக்குக் கட்டாயத் தேவையான ஊண் உறக்கங் கொள்வதிலும் நாட்டமின்றி, வேளை மறுத்து உண்டும், ஏலா உண்டியைத் தவிர்க்காமலும், நோயுற்ற வழி மருத்துவஞ் செய்து கொள்வதிலும் காலங் கடத்தித் தம் வாழ்நாளுக்கு ஊறுநேரத் தாமே வாய்ப்பளித்தலின் 'தம் உயிர் மாய்த்த; என்றார்.

பிறவற்றில் நாட்டமின்றித் தான் மேற்கொண்ட வினையில் முழுமூச்சாய் ஈடுபடுவானைக் குறித்து'அவன் அதிலேயே கிடந்து மாய்கிறான்; என்னும் உலக வழக்கையும் நோக்குக.

இனிக் கொடும் பகைவரை இனங்கண்டு அவரிடத்து விழிப்பாய் இராமையும் தாம் மாய்க்கப்படுதற்கு இடஞ்செய்தலால் அதுவும் கொள்ளப்படும்.

பெரியோர் சிலரே: மேற்கூறியவாறு தம் உயிரையும் பொருட்படுத் தாது பொதுநலத் தொண்டாற்றுவது பெரிதும் அரிய செயலாதலின் அதனைச் செய்வாரைப் பெரியோர் என்றார்.

மேல்'பலர்' எனப்பட்டோர் எண்ணற்றோர் ஆதலின் ஈண்டுச் சிலர் எனப்பட்டோர் மிகச் சிலர் எனக் கொள்க.

யாண்டு அவர் பிறந்தவர் ஆயினும்: மலை, கடல், யாறு முதலியவற்றான் இயற்கையானும் அரசால் செயற்கையானும் கண்டம், நாடு, பைதிரம் எனப் பாகுபடுத்தப்பட்ட இடப்பகுதிகளுள் எங்கே பிறந்தவர் ஆயினும்.

இனி, மொழியாலும் இனத்தாலும் தொழிலாலும் சமயத்தாலும் பாகுபட்டுக் கிடக்கும் மக்கட் பிரிவுகள் பலவற்றுள் எதன் கட் பிறந்தோராயினும் எனவும் கொள்க!

மாண்தக வையத்து அவர் வாழுநரே: அப்பெருமக்கள் இவ்வையகத்தில் என்றென்றும் சிறப்புற வாழ்பவரேயாவர். அவர் இறந்தும் இறவாதவரே என்றவாறு.

நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது

என்னுந் திருக்குறளையும் ஈண்டு நோக்குக!

பெருமக்கள் மேற்கொண்ட அருவினையின் நற்பயன் உலகத்தார்க்குத் தொடர்ந்து கிட்டுதலானும், வாழ்தல் என்பது பிறர்க்குப் பயனுற வாழ்தல் என்பதே சிறப்பாகக் கொள்ளப் படுதலானும் அப் பெரியோர் உடலளவில் மாய்ந்தாலும் இறப்பை வென்று என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் என அறிக!

உய்யுநர்: வாழ்க்கைத் துன்பங்களால் பல்லாற்றானும் அலைக் கழிக்கப்பட்டு அழிந்தொழியாமல் வாழ்க்கைப் பயனை முழுமையாகப் பெற்று ஈடேறுவோர்.

என்போர்: எனப்படுவோர்- என்று சிறப்பித்துச் சொல்லப் படுவோர். 'இல்வாழ்வான் என்பான்' என்றாற் போலச் செயப்பாட்டு வினை செய்வினை வாய்பாட்டில் நின்றது.

அவர் வழியோரே: அப் பெரியோர்தம் பின்செல்லியரே அவர்தம் வழியைப் பின்பற்றுவோரே என்றவாறு.

பின்பற்றுதலாவது அப்பெரியோர் வகுத்துரைத்த மெய்ந்நெறியில் வழுவாது ஒழுகுதலும், அவர் தொடங்கி நடத்திய அறவினை அல்லது அருந்தொண்டினைத் தொடர்ந்து செய்துவருதலும் அவர் இடை விட்ட வினைப்பாட்டை கடைக்கொட்கச் செய்து நிறைவேற்றுதலும் ஆகும்.

இப்பாடல் புறத்திணைப் பொதுவியலும் பொருண் மொழிக் காஞ்சி என்னுந் துறையுமாம்.

குறிப்பு : 'நூறாசிரியம் பாடல்கள் அனைத்தையும் பாவலரேறு ஐயா அவர்கள் எழுதி முடித்துவிட்டார்கள். உரையை மட்டும் அவ்வப்போது எழுதிப் பாடலும் உரையுமாகத் தென்மொழியில் வெளியிட்டு வந்தார்கள்.

இப்போது, ஐயா அவர்களின் மூலப் பாடலுக்குத் திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் உரையெழுதியுள்ளார். இனி பாடலும் உரையும் இவ்வாறே தொடர்ந்து வெளிவரும்.

– ஆசிரியர்.

'தீர்வு'த் திட்டம்!

- உணர்ச்சிப் பாவலர் **காசி.ஆனந்தன்**

அன்று முதல் இன்றுவரை இனவெறிச் சிங்கள அரசு தமிழர் சிக்கலைத் தீர்ப்பதில் அல்ல - தமிழரைத் தீர்ப்பதிலேயே அக்கறை கொண்டுள்ளது.

இலங்கையில் வடகிழக்கு மாநிலங்களுக்கு வெளியே - ஏறக்குறைய ஓராயிரம் சதுரக்கற்கள் (Sq.miles) தமிழர் நிலப்பகுதி சிங்கள சிறீலங்காவோடு இணைந்து கிடக்கிறது.

எந்தப் பேச்சுவார்த்தையிலும் இந்த நிலப்பகுதி தமிழர் நிலத்துடன் சேர்த்து எண்ணப்படுவதில்லை.

வடகிழக்கு மாநிலங்களுக்கு உள்ளே - ஏறக்குறைய மூவாயிரம் சதுரக்கற்கள் 1948-க்கு பின்பு நிகழ்ந்த சிங்களவர் குடியேற்றத்தின் மூலம் தமிழரிடமிருந்து பறிக்கப்பட்டுச் சிங்களவர் வாழ்விடங்கள் ஆகிவிட்டன.

சுருக்கமாகச் சொன்னால்-தமிழர், தங்கள் தாயகமான தமிழீழத்தில் நான்காயிரம் சதுரக்கற்கள் நிலப்பரப்பை இழந்த பின்பே விடுதலைக் களத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மையில் இனவெறிச் சிங்களச் சிறீலங்காவின் ஆட்சித்தலைவர் சந்திரிகா அம்மையார் வடகிழக்கு மாநிலங்களின் எல்லைகள் புதிதாகத் திருத்தி அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

இதன் பொருள் வடகிழக்கு மாநிலங்களின் எல்லைகள் மேன்மேலும் சுருக்கப்படும் என்பதுதான்.

எமது தாயகத்தின் எல்லைகளைத் திருத்தவும் மாற்றவும் இவர்கள் யார்?

தமிழீழம், தன் தாய்மண்ணில் ஒருவிரற்கடை அளவு நிலத் துண்டைக்கூடச் சிங்கள இனவெறியர் கையில் தராது என்பதைச் சந்திரிகா அம்மையார் தளப்பமின்றிப் புரிந்து கொள்ள வேண்டும். வடகிழக்கு மாநிலங்களுக்கு வெளியே உள்ள ஓராயிரம் சதுரக்கற்கள் தமிழர் நிலப்பரப்பும் - வடகிழக்கு மாநிலங்களுக்கு உள்ளே சிங்களர் குடியேற்றத்தால் பறிக்கப்பட்ட மூவாயிரம் சதுரக்கற்கள் நிலப்பரப்பும் தமிழர் கைக்கு வரும்வரை தமிழர் போர் ஓயாது.

வெள்ளைக்காரன் வெளியேறிய ஆண்டான 1948க்குப் பின்பு தமிழீழத்தில் இனவெறிச் சிங்கள ஆட்சியாளரால் திட்டமிட்டுக் குடியமர்த்தப்பட்ட சிங்களவர் அனைவரும் தமிழர் மண்ணை விட்டு வெளியேறியாக வேண்டும்.

இலங்கை முழுவதுமே முன்பொரு காலத்தில் தமிழர் தாயகமாக இருந்தது என்பதையும், பின்பே இலங்கைத் தீவின் பெரும்பகுதியைச்

சிங்களவர் பறித்துக்கொண்டனர் என்பதையும், எஞ்சிய நிலப்பரப்பாய் இன்று தமிழர் கையில் உள்ளதுதான் தமிழீழம் என்பதையும் - அவை வரலாற்று உண்மைகள் என்பதால் ஒப்புக் கொண்டு தமிழீழத்தை யாவது தமிழர் வைத்திருக்கட்டுமே என எண்ணும் மனப்பாங்குகூடச் சிங்களவரிடம் இல்லை.

இலங்கைத் தீவில் சிங்களச் சிறீலங்காவுக்கும் தமிழீழத்துக்கும் இடையே ஓர் உடன்பாடு வருவதானால் இலங்கை ஒரு தேசமல்ல - இரு தேசங்களைக் கொண்ட ஒரு நாடு என்பது அரசியல் யாப்பின் மூலம் ஒப்புக்கொள்ளப் படவேண்டும்.

ஆனால், இலங்கையில் நிகழ்ந்து கொண்டிருப்பது என்ன?

எட்டு மாநிலங்களாக இலங்கைத் தீவைப் பிரித்து - அவற்றில், எல்லைகள் குறைக்கப்பட்ட வட-கிழக்கு மாநிலத்தையும் ஒன்றாக ஆக்கப் போவதாக ஆட்சித் தலைவர் சந்திரிகா அம்மையார் தாம் அறிவித்துள்ள புதிய தீர்வுத் திட்டத்தில் ஏதேதோ கூறியிருக்கிறார்.

தமிழீழம் ஒரு மாநிலம் அன்று - அது ஒரு தேசம் என்பதைத் தடித்த சிங்கள இனவெறியாளர்களின் தலைவியார் புரிந்துகொள்ள வேண்டும்.

பாதுகாப்புத்தான் முதன்மையானது என்பதைப் பட்டறிவின் மூலம் உணர்ந்துள்ள தமிழர்களுக்குச் சந்திரிகா அம்மையார் அறிவித்துள்ள பாதுகாப்பு உரிமை நகைப்புக்குரியதாய் உள்ளது.

சிங்களச் சிறீலங்காவுக்குப் படையும் தமிழீழத்துக்கு காவல் துறையுமா?

ஆட்சியாளருக்கு நெற்றியில் கைவைத்து வணக்கம் தெரிவிப்பதற்கான பொம்மைக் காவல்துறையன்று - தமிழரை என்றும் காப்பாற்றவல்ல ஆளுமையுடைய தனிப்படையே தமிழர் தேவையாகும்.

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் சந்திரிகா அம்மையார் முன்வைத்துள்ள ஒன்றுக்கும் உதவாத இத்தீர்வுத் திட்டத்தைக் கூடச் சிங்கள இனவெறிப் புத்த ஆசான்களும் - அரசியலாளர்களும் ஏற்றுக் கொள்ள அணியமாக இல்லை என்பதுதான்.

சந்திரிகா திட்டத்தை எதிர்த்துக் கதிர்காமத்துக்கு நடைச்செலவு மேற்கொள்கிறார்களாம். சிறீலங்காவின் செய்தி ஏடுகள் அனைத்தும் சந்திரிகா அம்மையாரைச் சாடுகின்றனவாம்.

விளைவு-

அம்மையார் திட்டம் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. அங்கே முழுமையாகச் சிங்கள இனவெறியை உணர்ந்து கொண்டதால்தான் தமிழீழத் தனியரசு படைப்பதில் முழுமையாகத் தமிழர்களும் உறுதிகொண்டிருக்கிறார்கள். ❊

பெருஞ்சித்திரப் பெரியார்

என்ன செய்தார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்
என்றறிய வேண்டுமெனில் சிந்தனைசெய்திடுவீர்
சின்னதொரு வினைசெய்தோர் எத்தனையோ பேர்தாம்
சிறப்புக்கும் புகழுக்கும் விள்ம்பரம் தேடுகையில்
பன்னருஞ்சீர் பாவலரேறு தந்நலம்பாராமல்
பழையபெரு வரலாற்றைப் புதுக்கிடவே முனைந்தார்
இன்னதைச் செய்மினெனப் பிறரை ஏவாமல்
இயல்பாகப் பெருமகனார் தொடர்ந்துபணி செய்தார்!

பெரியாரின் வழியறிந்து பகுத்தறிவு பேணிப்
பெருமைமிகு மெய்யறிவால் தொண்டாற்றி நாளும்
எரிமலையாய்க் கனல்கின்ற உரிமையுணர் வாலே
எல்லோரும் புதுவாழ்வு சமைக்கவழி செய்தார்
பெருமானங் கருதாமல் பணிவினால் உயர்ந்து
பெயர்பெற்ற பனிமலையாய் இணையற்று நின்றார்
வருமானம் பார்க்காமல் வந்ததைப் பதுக்காமல்
வாழ்வாங்கு வாழ்ந்தார் பெருஞ்சித்திரப் பெரியார்!

சிறப்புடைய தமிழ்கொண்டு சிந்தனைக் கூர்மையினால்
சிக்கல்களை நீக்குகின்ற நற்பணியைப் புரிந்தார்
அறநெறியை எடுத்தினிது யாவர்க்குஞ் சொன்னார்
அயராமல் அவ்வழியில் தாம்நடந்தார் முன்னால்
பொறுப்போடு பேசிப்பல ஐயறவு தீர்த்தார்
பொய்யில்லா வாழ்வதனால் பெருமிதமே சேர்ந்தார்
திறப்பாட்டால் எமையீர்த்துத் செம்மையுறச் செய்தார்
திகழ்கின்ற புகழ்வடிவாய் தாம்நிலைத்து நின்றார்!

நின்ற அவர் ஒளிநமக்கு நல்லறிவு தரட்டும்
நீண்டபுகழ்த் தமிழ் இனத்தை மீட்கும் வழி வரட்டும்
அன்றவரால் வார்த்தெடுத்துக் கருவிகளாய் ஆனோம்
அருந்தமிழின் உரிமைகளை ஆவிதந்தும் காப்போம்
சென்றபெரு வரலாற்றில் புதுமைகளைச் சேர்த்தே
செயலாற்றி எதிர்காலம் சிறப்படையச் செய்வோம்
தென்றலோடும் கதிரோடும் தமிழ்பிறந்த உண்மை
தென்போடு உலகெங்கும் முழங்கிடுவோம் நன்றே!

– அரிமா வளங்கோ

நீ, மீண்டு எழுந்தே வா! இலையேப் நாட்டில்
நீண்ட இனப்போர் முரசில் ஒலியே இல்லை!
நீ, மீண்டு எழுந்தேவா! இலையே; எங்கள்
நீள்கரத்தில் வாளேந்த விரலே இல்லை!

பெருங்கவிக்கோ — வா.மு. சேதுராமன்.

தளராமல் தனித்தமிழை வளரச் செய்தே
தன்மானம் தமிழ்மானம் நிலைக்கச் செய்தோன்!
இளையோரைப் பாநெருப்பால் எழும்பச் செய்தோன்!
இறப்புலகில் சாய்ந்தாலும் தமிழாய் நிற்பான்!

திருச்சி. — பாவலர். சிங்காரவேலன்.

பாவாணர் போலநீ பைந்தமிழ்ச் சொல்லாய்ந்தாய்
பாவேந்தர் போலநீ பாப்புனைந்தாய்- பாவாண்ட
வள்ளுவத்தின் புத்துரைதான் பாதியிலே நின்றதெனத்
துள்ளுதே நெஞ்சம் துவண்டு.

காரைக்குடி — தெ. முருகசாமி.

தமிழுக்குக் கிடைத்திட்ட மாசற்ற மாணிக்கம்!
தனித்தமிழ் நெஞ்சங்கள் போற்றும் தங்கம்!

பெரம்பலூர். — புலவர் தமிழரங்கன்.

பெருஞ்சித் திரனார் பேருலகோர்
பெரிதும் விழைந்திடத் தமிழ்வரையும்
அருஞ்சித் திரனார்! உடல், பொருளும்
ஆவியும் தமிழ்க்கே அளித்திட்டார்!

சேலம் —செ. மல்லப்பிள்ளை.

துன்பம் தொடர்ந்தாலும் தூண்டுந் தமிழுணர்வால்
பண்பில் பழுத்திட்ட பாவலராய் - வென்றிசைத்த
சந்தப் பெருஞ்சித் திரனாரை யாமீண்டே
எந்தநாள் காண்போம் இனி? — புலவர் தமிழறிவன்.

தமிழாய்ப் பாடிய தமிழ்ச்சிட்டே
பாடியது போதும் என்று
பறந்து நீ சென்றாயோ?

மதுரை — ம. இரா.தமிழினியன்.

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை!

- பேராசிரியர் சாலை இளந்திரையன்

"தமிழனுக்கு வீழ்ச்சியில்லை, தமிழன் சீர்த்தி தாழ்வதில்லை!" என்று அறுதியிட்டு உறுதி சொன்னான் சுப்புரத்தினப் புரட்சிப் பாவலன். "தனி நின்றும் புகழ் செய்வான், படையாகச் சேர்ந்தும் தமிழுக்கே புகழ் செய்வான்' - அவன் எங்கள் தமிழன்! இனிதான எவற்றுக்கும் ஒரு வேலியாக இருதோள்கள் புடைப்பானே, அவன் எங்கள் தமிழன்!" என்று அந்தத் தமிழனை அறிமுகம் செய்து,-

"களம் கண்ட தமிழ்நெஞ்சம்
தரைதட்டிப் போமோ?
காசுக்கும் பணத்துக்கும்
விலையாகிப் போமோ?
உளம் கொண்ட அளவுக்கும்
வீரத்தைத் தேக்கி
உலகாண்ட இருதோள்கள்
தளர்வுற்றுப் போமோ?"

என்று விடை வினாத் தொடுத்தான் அறிவியப் பாவலன்.

தமிழ் வீரத்தைப் பெருமிதத்தோடு எடுத்து முழக்கும் நூல்களிலே ஒன்று 'ஈழத்துப் புலிகளுடன் 28 நாள்' என்னும் தலைப்பில் 6.9.1992-இல் வெளிவந்துள்ளது. இதில் உள்ள உரை வீச்சு ஒவ்வொன்றும், - 1983 தொடங்கி ஈழத்தில் நடைபெற்றுவரும் மாளாத வீரங்களை வரிசைப்படுத்தி - 'தமிழனுக்கு வீழ்ச்சி இல்லை!' என்பதை உறுதி செய்கிறது; 'உலகாண்ட இருதோள்கள் தளர்வுற்றுப் போமோ?' என்னும் விடை - வினாவுக்கு, 'இல்லை! தளர்வுற்றுப் போகமாட்டா!' என்று வீர விடை தருகிறது.

தெரியாமல்தான் கேட்கிறேன்-
தெருவிலே எனக்கென்று
ஒரு வீடு கட்டிக் கொள்ளுவது தவறா?
ஒரு வீடு என்று இருந்தால்,
அதற்குச் சுவர் இருக்க வேண்டும்.
மேலே கூரை இருக்க வேண்டும்!

இப்படி ஒரு வீட்டை
நான் கட்டிக் கொள்ளுவது தவறா?
இப்படி ஒரு கேள்வியோடு
எழுந்து கொண்டார்கள் தமிழர்கள்;
ஈழத்திலே எழுந்து கொண்டார்கள்!
இரண்டு தோள்களாலும் எழுந்து கொண்டார்கள்!

இப்படித்தான் தொடங்கியது அந்த இளைய தமிழர்களின் புதிய வரலாறு. வீரத்துக்கும் அதற்கு அடிப்படையாக உள்ள மானத்துக்கும் எடுத்துக் காட்டாகப் புறப்பட்டதால் அந்த வீரர்களின் நடையே புதுப்பொலிவு காட்டுகிறது.

வீரம் விளைவிக்கப் புறப்பட்டவன்
யாருக்காகவும் காத்திருக்க மாட்டான்;
எங்கே எப்படி என்று
யாரையும் அவன் கேட்கவும் மாட்டான்!
சூரியன் வெயிலடிப்பதற்கு யாரைக் கேட்கிறான்?
தமிழரின் தென்பொதிகை
தென்றலை எழுப்புவதற்கு யாரைக் கேட்கிறது?
கூடிக் குவிந்த கருமேகம்
கொட்டித் தீர்க்கட்டுமா என்று யாரைக் கேட்கிறது?
எதிரி ஒருவன் துள்ளிக் குதிக்கும் போது,
'இதோ நான், - என் இரண்டு தோள்கள்!' என்று
எதிரூன்றி நிற்பது வீரம்;
இரண்டு தலைகளில் ஒன்று
உருளப் போகிறது என்று கட்டியம் கூறுவது வீரம்!

இந்த வீரத்தைத்தான், வேறு யாரையும் எதிர்பாராமலே, தன் மண்ணில் நடத்தப் புறப்பட்டான் ஈழத்தமிழன். எப்படிப் புறப்பட்டான் என்றால், - "புதைகுழி கீறிப் புறப்படும் மனிதன் புவியில் என்றேனும் பிறந்தது உண்டோ? என்றே பிறர் இடிந்து நிற்க, இறந்த தமிழன் ஈழத்தில் எழுந்தான்; இறவாத வரலாற்றை நீளமாய் வரைந்தான்!" இவனுடைய நடைதான் ஏற்றமிகு தமிழ்நடை. ஏனெனில், தமிழனுக்கே உரிய தருன நன்னடையே இவன்தான் எடுக்கிறான். விளக்கம் சொல்லுகிறது உரை வீச்சு:

உறுதி இருக்க வேண்டும்
உணர்வோட்டங்களிலே
உறுதி இருக்க வேண்டும்:
அடிக்க வேண்டிய இடத்திலே
அன்பாகத் தடவிப் பார்க்கக் கூடாது!
வெடிக்க வேண்டிய இடத்திலே
வீர ஆமணக்காக
வெடித்து வெடித்தே தெறிக்க வேண்டும்!

இப்படித்தான் செய்கிறான் ஈழத்துத்தமிழன். அதன் மூலம் புரட்சிப் பாவலனின் உறுதிக்கும் அறிவியப் பாவலனின் அறுதிக்கும் இவன் புதிய அரண் செய்கிறான்.

'சேவல் என்றால் அது சிறகடிக்க வேண்டும், - சிறகடித்துக் கூவ வேண்டும்; கூவி, உலகத்தையே எழுப்பிவைக்க வேண்டும்!... சேவல் கூவுவதைப் பார்த்திருப்பீர்கள், - கூரையில் ஏறிநின்று கூவுகிறது, குலப் பெருமையை நாள் தோறும் கூவுகிறது! யாரேனும் எதிர்க்குரல் எடுத்தால், சேவலின் காலில் கத்தியுகிர் இருக்கிறது - சீறி எழுந்து சின்னா பின்னப் படுத்தி விடுகிறது! ஈழத்து இளமை இதைத்தான் செய்தது; எல்லா உலகத்தையுமே எழுப்பி வைத்துவிட்டது! ஈழத்து இளமை சேவலாய்ச் சிறகடித்தது; எதிரி திமிர்ந்து வந்தபோது, இரண்டு கால் உகிர்களையும் குருதியில் தோய்த்தது!'

வீர விழுதுகள்!

இங்குள்ள சிலபேர், "ஏழரைக் கோடித் தமிழர்களில் எங்கோ உள்ள சிலபேர் தானே எழுந்து கொண்டார்கள், எல்லாரும் எழுந்து கொள்ளவில்லையே!" என்று தளர்ச்சி நினைப்புக்குத் தங்கள் நெஞ்சிலே இடம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு அழகாக விடை தருகிறது உரைவீச்சு:

ஈழத்து விழுதுவேர்களைப் பார்த்தீர்களா?
அடிமரமே இற்றுப் போனாலும்
ஆலமரமாக ஊன்றிக் கொண்டன விழுதுகள் -
அழகிய வலிய ஈழத்து விழுதுகள்!
தமிழ் இனம் என்கின்ற ஆலமரம்
அடிசெத்தாலும் கிளை சாயாது என்பதை
ஆணிவேராக உறுதிசெய்தன ஈழத்து வேர்கள்!

எனவே புரிந்து கொள்ளுங்கள் -
எந்த இனமாவது ஆலமரமாக வளர்ந்தால்,
அந்த இனத்துக்கு ஆயிரம் விழுதுகள் இருப்பதால்
யாராலும் அதை வீழ்த்தவே முடியாது!

'பார்த்திருக்கிறீர்களா, எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?

குஞ்சுக் குஞ்சுக் கோழிக் குஞ்சுகள் - அவற்றிலேயே சேவல் குஞ்சுகள், பெட்டைக் குஞ்சுகள், - தங்கள் இளம் இறக்கைகளைத் தட்டிக் கொண்டு, ஈன்றெடுத்த தங்கள் தாய்க்குப் பாதுகாப்பாக எழுந்து நிற்பதைப் பார்த்திருக்கிறீர்களா? வாருங்கள், பாருங்கள் - வளமார் ஈழத்திலே, இது வரலாறாகிக் கிடக்கிறது பாருங்கள்! தாய்க் கோழியைப் பாதுகாக்கும் தடந்தோள் குஞ்சுகள், சரிந்து கிடந்த தமிழ் வரலாற்றை மட்டுமன்று, உயர்ந்து நின்ற உலக வரலாற்றையே கூட ஒரே நாளில் உயர்த்திப் புதுக்கிவிட்டார்கள்!' ஆமாம், ஈழத்திலே எழுந்த தமிழ்வீரம் எல்லாத் தமிழர்களின் ஒட்டு மொத்தமான வீரமே.

மானமும் வீரமும் தமிழர்களின் இரண்டு உயிர்க் கூறுகள். அவை இல்லாமலும் வாழ்ந்துவிடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டு இங்குள்ளவர்கள் தளர்ந்து கிடந்தபோது, அவை இரண்டும் இல்லாமல் வாழவே முடியாது என்று நிமிர்ந்து மிளிர்ந்தார்கள் ஈழத் தமிழர்கள். எனவே, தமிழ் வரலாற்றில் மறுதளிர்ப்புச் சிறகடித்தது; மானப் பெரு வாழ்வும் நடை எடுத்தது.

'கல்வியில்லாமல் வாழலாம்
சிலபேர் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்!
கஞ்சியில்லாமலும் வாழலாம் -
பலபேர்
அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்!
மானம் இல்லாமல் வாழ முடியுமா?-
அது
துணி இல்லாமல் திரிவது போல அல்லவா?
வீரம் இல்லாமல் வாழ முடியுமா?
அது
விழி இல்லாமல் குமைவது போல அல்லவா?'
இப்படி எழுந்தனர் தமிழர்கள்
ஈழத்துத் தமிழர்கள்!

(தொடர்ச்சி 29-ஆம் பக்கம்)

வண்ணத் தமிழ் மலர் உதிர்ந்தது!

தமிழ் இயக்கம் சென்ற நூற்றாண்டின் நடுவில் (மத்தியில்) வடலூர் வள்ளல் பிரான் அவர்களால் துவக்கப்பெற்றது. மணிப் பிரவாளமும் கிரந்தத் தமிழுமாய் இருந்து வந்த காலத்தில், அருள்தமிழ் ஆற்றலால் தமிழைப் புதிய பாதையில் திருப்பிய பெருமை வள்ளலாரையே சாரும். எளிய இன்தமிழில் பல்லாயிரம் பாடல்களை அருளியதோடு அழகிய (அற்புதமான) உரைநடையையும் துவக்கி வைத்தார். அடுத்து, தமிழ் இயக்கத்துக்கு அரண் சேர்த்தவர்களின் பட்டியல் நீண்டது. அதில் முகாமையான (முக்கிய) இடம் பெற்றவர்கள் பெரும்பாவலர் (மகாகவி) பாரதியாரும், மறைமலை அடிகளாரும், பாவேந்தர் பாரதிதாசனுமாவர். இம் மூவரிலும், தனித்தமிழ் இயக்கத்தைத் துவக்கிய மறைமலையடிகளார் தென் தமிழிலும்- வட மொழியிலும் துறைபோகிய பேரறிஞர். அவர் காட்டிய நெறியில்- இந்த இயக்கத்தின் படைத்தலைவராய் (தளபதியாய்) விளங்கியவர் 'பாவலர் ஏறு' பெருஞ்சித்திரனார்.

பாவலர் (கவிஞர்) செகவீரபாண்டியனார், பெரும்புலவர் (மகாவித்வான்) வேணுகோபால் பிள்ளை, தண்டபாணி தேசிகர் போன்றோரோடு ஒப்பிடத்தக்க புலமை வளம் செறிந்தவர் பெருஞ்சித் திரனார். அவருடைய தோற்றம் மட்டுமின்றி அவருடைய தமிழ் நடையும்- சங்ககாலப் புலவர் ஒருவர் உயிரோடு எழுந்து வந்துவிட்டாரோ என்ற திகைப்பை எவருக்கும் ஏற்படுத்தக்கூடியது. எல்லா அறிஞர்களையும் (மேதைகளையும்) போலவே, பல்வேறு தருக்கத்திற்குரிய சிக்கல்களில் (சர்ச்சைக்குரிய பிரச்சனைகளில்) வேகமான தீவிர நிலைகளை மேற்கொண்டிருந்தவர். அவர், இவை அனைத்துக்கும் அப்பால், அவர் உள்ளத்தாலும், உணர்வாலும், வயிரமேறிய தமிழ்க் குன்றம், தமிழ்ப்பித்தர். அவருடைய மறைவின் மூலம் தமிழுலகத்தில் வண்ண மலர் ஒன்றைக் காலம் பறித்துக் கொண்டோடி விட்டது.

– ஆசிரியவுரை 'தினமணி' நாளிதழ்

புலவர் பெருஞ்சித்திரனார் ஒரு பெரும் பாவலர் (கவிஞர்) மட்டும் அல்லர்; ஒரு மாவீரனும் கூட. தமிழகத்தில் தமிழுக்கும் தமிழீழத்துக்கு மான போராட்டங்களில் முனைப்புடன் ஈடுபட்டவர். அது மட்டுமன்று, வீரத்துடன் பலமுறை சிறை சென்ற செம்மல். அத்தகைய வீரர் திடீரென மறைந்தது எமக்கு பெரிய அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது.

தமது எழுத்துக்களாலும், பேச்சாலும், தமிழீழம் சார்பாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகவும் வாதாடிய ஒரு பெருந்தமிழ் மகனின் இழப்பு தமிழகத்தில் பெரும் வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்தி உள்ளதாக எண்ணத் தோன்றுகிறது. திருவாளர் பெருஞ்சித்திரனார் கண்ட பாவலேறு பெருஞ்சித்திரனாரின் மறைவு மிகவும் வருந்தத் தக்கது. தமிழுக்காகத் தன்ம்குடும்பத்தையே ஈகப்படுத்தியவர் அவர்.

இயல்பாக ஓவியம் அவரைத்தான் அழகுபடுத்தும், பெருஞ்சித் திரனாரோ, அழகு தமிழையே அழகுபடுத்தி வழிபட்டவர்.

– 'டி.இராசேந்தரின் உசா' கிழமை இதழ்

பெருஞ்சித்திரனார் காலமாகிவிட்டார். மாபெரும் தமிழ் மொழிப் போராளியின் காலத்தில் வாழ்ந்த பெருமையை நமக்களித்துவிட்டு அவர் புகழுடல் எய்தி (அமரராகி)விட்டார்.

பாவலரேறுவின் இறுதி ஊர்வலத்தில் நம்மோடு கலந்து கொண்ட, இன்னும் சில மாதங்களில் தமிழகக் காவல் துறையிலிருந்து ஓய்வு பெற இருக்கின்ற அதிகாரி ஒருவர் விழிகளில் ஈரம் கசிய நம்மிடம் சொன்னார்.

"காவல்துறைப் பதிவில் இந்தத் தமிழ் மறவனைப் பற்றிய குறிப்புகளைப் படிக்கும்போது, எங்கள் உடம்புக்கும் சிந்தனைக்கும் அணிவிக்கப்பட்டிருக்கும் எஃகு ஆடைகளையும் துளைத்துக்கொண்டு எங்கள் மயிர்க்காம்புகள் சிலிர்க்கின்றன இப்படியும் ஒரு மொழிப் போராளியா?

மொழித்தூய்மை! இனத்தூய்மை! நிலத்தூய்மை! இந்த மூன்றும் நிறைந்த தமிழ்த் தூய்மையாளரை வணங்குவோம்.

– நக்கீரன்

*பிழைப்புக்காரர்களைப்போல், தமிழின இரண்டகர்களைப் போல் அல்லாமல் உண்மையில் இறுதி மூச்சுவரைப் போராடினார் பெருஞ்சித்திரனார்.

தமிழறிஞர் பெருஞ்சித்திரனாருடைய கொள்கை அரசியல் வழி அணுகு முறைகளில் எமக்கு மாறுபட்ட கருத்து உள்ளதெனினும் இன, மொழி ஒடுக்குமுறைகளுக்கு எதிரான அவரது மக்கள் நாயகப் பணிகளை மதிக்கின்றோம்; அவருடைய மறைவு தமிழுக்கும், தமிழினத்திற்கும் பேரிழப்பு என்று உணர்கிறோம். **—'புதிய சனநாயகம்'**

* தனித்தமிழ் இயக்கத்தின் தளபதியாக விளங்கியவர் தமிழறிஞர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். **– தேவி– கிழமை இதழ்.**

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

தமிழ்நாடு

பொதுச் செயலர் அறிக்கை.

மொழி, கலை, இலக்கியம், பொருளியல், அரசியல், பண்பாடு, குமுகவியல், அறிவியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் அயல்நிலை ஆளுமைகளைத் தவிர்த்துத் தமிழினம் முன்னேற வேண்டும் என்று கருதிய பாவலரேறு ஐயா அவர்கள் உருவாக்கிய உண்மை உழைப்பியக்கமே உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தொடங்கப் பெற்ற காலத்திலிருந்து கொள்கை யியக்கமாகவே நிலவியிருந்திருக்கிறது. இயக்கம் பரவலாகக் கட்டப் பெற்றிருந்ததோடு, எந்த ஓர் இயக்கமும் தமிழின முன்னேற்றங்கருதி இதன் கொள்கைகளை எடுத்துச் செயல்பட்டாலும் அந்த இயக்கத்திற்குத் துணை செய்து போற்றிக் கொள்ளும் இயக்கமாகவும் உ.த.மு.க. இயங்குதலை பாவலரேறு ஐயா அவர்கள் ஊக்கி வந்தார்கள்.

இந் நிலையிலேயே இக் கொள்கை ஈடுபாட்டாளர்களைக் கொண்டு உ.த.மு.க. கருத்தரங்கம், மாநாடு, போராட்டம் இவற்றை யெல்லாம் வெற்றியுடனேயே சந்தித்து வந்தது. இந்த நிலைப்பாடு அரசு எடுக்கும் கருப்புச் சட்ட வல்லாளுமை நடவடிக்கைகளை எதிர்க்க போதுமானதாக இல்லை. எடுத்துக்காட்டாக இதன் நிறுவனரான ஐயா அவர்களின் மீதே தடா சட்டம் ஆட்கொண்ட போதும்கூட, தேசிய இன உரிமைக் கொள்கையைக் கொண்ட தோழமை இயக்கங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்ட அளவில், உ.த.மு.க.இயக்கம் பரவலாக இயங்கவில்லை.

நிலை இவ்வாறு இருக்க, இன்றைக்கு உ.த.மு.க. பரவலாக இயங்கும் நிலைக்குக் கொண்டு வரவேண்டி சிற்சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன. மக்கள் நாயகத் தேர்ந்தெடுப்பு முறையை உடனடியாக நடைமுறை இயக்கத்தை நிலை நிறுத்த வேண்டியுள்ளது. தமிழ்நிலம் தொடர்ந்து இயக்க ஏடாக விளங்க வேண்டியுள்ளது.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள், எந்த அரசியல் கட்சிகளுக்கும், இயக்கங்களுக்கும் வழிகாட்டக் கூடியனவேயன்றி அவற்றிற்குக் கட்டுப்பட்ட அல்லது அவற்றைச் சார்ந்த அமைப்பாக உ.த.மு.க.என்றும் இயங்குவதாகாது. ஏனெனில் உ.த.மு.கவின் கொள்கைகள் தமிழின நலத்திற்கேற்ற அறம் சார்ந்தவை; இனம் முன்னேறத் தக்க ஒளி மிகுந்தவை.

எனவே தமிழின உணர்வாளர்கள் எவரும், அவர் அரசு ஊழியராயினும், அலுவலராயினும், பொதுத் துறைப் பணியாள ராயினும் உ.த.மு.கவில் இணைந்து பொறுப்பேற்றுச் செயற்படலாம். அரசியல் கட்சி சார்பின்றித் தமிழின முன்னேற்றம் ஒன்றிணைவையே முகாமையாகக் கொண்டு, உலகந் தழுவிய இயக்கமாக உ.த.மு.க. செயல்படும். எனவே, தமிழினத்தார் அனைவரையும் உ.த.மு.க.வில் உறுப்பினராகிட அழைக்கின்றோம்.

உ.த.மு.க வின் கொள்கைகளைச் செயற்பாட்டின்போது மாறாது நெறிபடுத்திக் கொண்டு செல்ல நெறிபடுத்தும் குழு ஒன்றை வைத்துக் கொண்டு, அனைத்துப் புதிய பொறுப்பாளர்களையும் மக்கள் நாயகத் தேர்ந்தெடுப்பு முறையில் அமைத்து-உ.த.மு.க.கிளை, மாவட்டக்கிளை, செயலகம், தலைமையகம் எனும் நான்கு அடுக்காகச் செயல்படப் பொதுக்குழு கூட்டப்பெறும்.

இப்பொதுக் குழு கூட்ட ஆவன செய்துவருகிறோம். எனவே உ.த.மு.க. ஈடுபாட்டாளர்கள் யாவரும் இயக்கம் தொடர்ந்து செறிவோடு செயலாற்றவல்ல கருத்துகளைத் தொகுத்து அனுப்ப கேட்டுக் கொள்கிறோம்.

– பறம்பை அறிவன்

5, அருணாசலத் தெரு — பொதுச்செயலாளர், உ.த.மு.க.
சென்னை - 600 005. — *(6-9-95)*

தென்மொழி நாள்காட்டி

பாவலரேறு ஐயா அவர்களின் உருவப்படத்தைத் தாங்கி நாள்காட்டி வெளிவரவுள்ளது.

ஐயா அவர்களின் பாடல் வரிகளும் பொதுவான பல நினைவுக் குறிப்புகளும் இடம்பெறும். தி.பி.2026 சிலை இறுதியில் (சனவரி தொடக்கம்) அடக்க விலைக்கே விற்பனைக்குக் கிடைக்கும்.

அன்பர்கள் தங்களுக்குத் தேவையான படிகளை முன்கூட்டிப் பதிவு செய்து கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்.

ஆட்சி மொழி ...

-குமரி மைந்தன்

தமிழகத்தில் இன்று தாய்மொழிப் பயிற்சி, தாய் மொழி வழிக் கல்வி, தமிழ் ஆட்சி மொழி முதலியன பற்றிய சிக்கல்களை ஆராய்ந்து அவற்றுக்கான முயற்சிகளை மேற்கொள்வதில் சிறிது விழிப்பு உணர்வு தோன்றியுள்ளது. அவற்றுள் ஆட்சி மொழி குறித்து இங்குச் சில காண்போம்.

பண்டைத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக விளங்கினாலும் கடைக் கழகத்தின் இறுதிக் காலத்திலேயே இங்கு வேதமொழி சாய்கால் பெறத் தொடங்கிவிட்டதற்கான தடயங்கள் உள்ளன. களப்பிரர் காலத்திலும் பல்லவர் காலத்திலும் வடமொழியின் வல்லாண்மை தலைதூக்கி நின்றது, ஒரு நிகழ்முறைத் தொடர்ச்சியே யன்றி,மாற்றுமொழியாளர்தம் படையெடுப்பின் விளைவு என்று கொள்வதற்கில்லை.

பல்லவர் காலத்தில் தோன்றிய சிவனிய எழுச்சியில் ஒரு தனித்தமிழ் இயக்கமும் அடங்கியிருக்கிறது. ஆயினும், அடுத்துத் தோன்றிய பிற்காலச் சோழப்பேரரசின் கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் குறிப்பாக அரசர்களின் மெய்க்கீர்த்திகளில் சமற்கிருத ஆளுமை மேலோங்கி நிற்கவே காண்கிறோம்.

அரசுகளும் கோயில்களும் சமற்கிருதக் கல்விக்கே அனைத்து உதவிகளும் செய்தன. மடங்களும் அம் மொழிக்கே முதலிடம் தந்தன. அதனால் பொது மக்கள் அறிவதற்காகத் தமிழில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், எழுத்து இலக்கணம் என்று அனைத்து வகையிலும் தரமழிந்திருந்தன.

பொதுவாக உலக வரலாற்றில் ஆள்வோரும் பூசாரிகளும் மக்களுக்கு விளங்காத மொழிகளையே விரும்பி வந்துள்ளனர். ஐரோப்பாவில் ஏறக்குறைய பதின் மூன்று நூற்றாண்டுக் காலம் ஆட்சியிலும் கோயில்களிலும் மக்களுக்கு விளங்காத கிரேக்கமும், இலத்தீனுமே பயன்பட்டன. இங்கிலாந்தில் நான்காம் என்றியும் செருமனியில் மார்ட்டின் லூதரும் கிளப்பிய புயலினால் வெடித்த போர்களில் ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாக ஓடிய குருதியாறுதான் இவ்விரண்டு மொழிகளைக் கரைத்து மக்களின் தாய் மொழிகளுக்கு இடமளிக்கத் தொடங்கியது.

தமிழ்நாட்டில் சென்ற ஈராயிரம் ஆண்டுகளாக ஆட்சியாளர்களால் தமிழ் படிப்படியே புறக்கணிக்கப்பட்டு, அயல் மொழிகள் ஏற்றம் பெற்று வந்துள்ளன. இந்நிலையையும் மீறி மக்கள் தமிழைச் சீரிளமைத் திறங்குன்றாது வைத்திருக்கின்றனர். அடித்தட்டு மக்களின் கோட்டைக்குள் பிறமொழி வல்லாண்மை ஊடுருவ முடியவில்லை. வெட்டவெட்டத் தளிர்க்கும் உயிர் மரமாகத் தமிழ் அவர்களிடம் வேர் கொண்டிருந்தது.

ஆனால், இன்றைய நிலை மாறிவிட்டது. திரைப்படங்களும், வானொலியும் தொலைக்காட்சியும் பிறவும் தமிழின் வேரில் வெந்நீரை ஊற்றுகின்றன. இந்நிலையில் தமிழை மீட்கவும் காத்து வளர்க்கவும் நாம் அதிக முனைப்போடும் ஆழ்ந்த சிந்தனையோடும் செயல்பட வேண்டியுள்ளது.

நாட்டு விடுதலைக்குப் பின் பதவியேற்ற அரசுகள் தமிழ் ஆட்சி மொழியாவதற்குப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டன. படிப்படியாகத் தமிழ் ஆட்சிப் பணிகளில் இடம் பிடித்து முன்னேறியது. ஆனால் அதற்குப் பல தடைகள் போடப்பட்டன. எடுத்துக்காட்டாக உயரற மன்றத்தில் தமிழில் தீர்ப்பு வழங்கவேண்டும் என்ற திட்டம் தமிழக அரசால் உருவாக்கப்பட்ட அதே வேளையில், நடுவணரசு உயர் அறமன்ற நடுவர்கள் மாநிலத்துக்கு மாநிலம் மாற்றப்படுவார்கள் என்று ஆணை பிறப்பித்தது. எனவே தீர்ப்புகளைத் தமிழில் எழுதும் முயற்சி மேற்கொள்ளப்படவே இல்லை.

ஐந்தாண்டுத் திட்டம் போன்று ஏறக்குறைய மாநிலத்தின் அனைத்து துறைத் திட்டங்களும் நடுவணரசிடமிருந்து உதவி பெறும் வகையில் இந்திய அரசின் பொருள்நிலை ஆள்வினை மாற்றப்பட்டது. எனவே உருவாக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்ந்து ஆங்கிலத்திலேயே உருவாக்கப்பட்டன.

மாற்றம் என்பது கடினமான உழைப்பும் கவனமும் தேவையான நிகழ்முறை. அதனைச் செயற்படுத்துவது எளிதன்று. இந்தச் சிக்கலான நிலையில் மேற்கூறியவாறான தடைகள் இந்த மாற்றத்தைச் செயற்படுத்தும் எண்ணத்தையே இல்லாமலாக்கி விடுகின்றன.

இந்த மாற்றத்தைச் செய்ய பொதுமக்களின் எழுச்சி தேவை. ஆனால், இந்த எழுச்சி தோன்றுவதற்குரிய சூழ்நிலையும் இல்லை. அதாவது தமிழக மக்களின் வாழ்வுக்குத் தமிழ் அறிவு இன்றியமையாதது என்ற சூழ்நிலை இல்லை. குறைந்தது தமிழால் வாழமுடியும் என்ற நிலை, பட்டிமன்றம், வழக்காடு மன்றம்,

பாட்டரங்கம், கருத்தரங்கம் நிகழ்த்துவோர் தவிரப் பொதுமக்களுக்கு இல்லை. உள்நாட்டில் வேலை வாய்ப்பில்லை; எனவே பிற மாநிலம், ஏதாவது அயல்நாடு ஒன்றுக்கு ஓடுவதுதான் வாழ வழி என்ற சூழ்நிலை உள்ளது. இதனால் தமிழ் ஆட்சி மொழி அல்லது கல்வி மொழியாக இருக்க வேண்டும் என்ற உந்துதலுக்கு வழியில்லை.

இந்த நிலை மாற நாம் என்ன செய்ய வேண்டும்? நம்நாடு பொருளியல் தற்சார்பு பெற நாம் போராட வேண்டும். மக்களின் மூலவீட்டையும் முன்முயற்சியையும் உழைப்பையும் முடக்கும் வகையில் அமைந்திருக்கும் வருமானவரிக் கெடுபிடிகள், தொழில் உரிமமுறை, மூலப்பொருட்களுக்கு ஒதுக்கீட்டு முறை, இசைவாணை (பெர்மிட்) முறை ஆகியவற்றை ஒழிக்கப் பாடுபட வேண்டும். ஏற்றுமதி என்ற பெயரில் அரும்பொருட்கள் எல்லாம் மூலப்பொருள் நிலையில் ஏற்றுமதி செய்யப்படுவதை எதிர்த்து நாம் போராட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் தான், இங்கு பிழைக்க முடியாமல் பிற நாடுகளுக்கு பிழைப்பு தேடி ஓடுவதற்கும், அவ்வாறு ஓடிய இடங்களில் பன்றிகளைப் போல் இருட்டறைகளில் அடைக்கப்பட்டும், நாய்களைப் போல் கொலை செய்யப்பட்டும், அழிவை நோக்கி நடைபோடும் இளைய தலைமுறையின் கவனம் நம் நாட்டின் மீதும் அதன் இன்றைய அவல நிலைக்குரிய காரணங்கள் மீதும் திரும்பும். அவற்றின் விளைவாக எழும் செயலூக்கங்களில் ஒன்றாக கலை இலக்கிய மலர்ச்சி தோன்றும். பிற மொழிக் கல்விக்கு மக்களிடையில் இருக்கும் நாட்டம் குறையும்; அவர்களின் ஆதரவை நாடும் நம் முயற்சியும் வெற்றி பெறும்.

எனவே நாம் ஆட்சியிலும் கல்வியிலும் தமிழ் இடம்பெற வேண்டுமென்று நினைத்தால் பொருளியல் தற்சார்புக்கான போராட்டங்களின் மூலம் பொதுமக்களின் கவனத்தையும் ஆதரவையும் ஈர்த்து அத்துடன் தமிழ்மொழி மேம்பாட்டுக்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

நிலம் பாழாகிப்போனால் மரம் வாழாது. பேசும் மக்கள் வளங்குன்றி வறுமையுற்று வேரற்று நிற்பார்களானால் மொழி எவ்வாறு வளம் பெறும்? எனவே தமிழை வளர்க்க வேண்டுமென்று நெஞ்சார விரும்புவோர் தமிழ் மக்களின் பொருளியல் வாழ்வு சிறக்கத் தேவையான நடவடிக்கைகளில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

சிறகு

– க.குழந்தைவேலன்

ஊர், நகரம் முதலானவற்றில் தெரு ஒன்றிலுள்ள ஏதேனும் ஒரு வீட்டைக் குறிப்பிட நேர்ந்தால், அத்தெருவின் 'வலப்பக்கத்து நாலாவது வீடு; இடப்பக்கத்து ஏழாவது வீடு'என்றாங்கு வழங்கக் காண்கின்றோம். வலப்பக்கம் இடப்பக்கம் என்பன செல்லும் திசையைப் பொறுத்து மாறுபடும். எங்கிருந்து சென்றால் வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் என்னும் குழப்பம் நேராதிருக்கும் பொருட்டுப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே 'சிறகு' என்னுஞ் சொல்லை நம் முன்னோர்கள் பயன்படுத்தியுள்ளனர்; வட சிறகு, தென் சிறகு என்றும், கீழ்சிறகு, மேல்சிறகு என்றும் வழங்கியுள்ளனர்.

பேரரசன் இராசராசன் காலத்துத் தளிச்சேரி * பற்றிய கல்வெட்டு ஒன்றில் "தெற்கில் தளிச்சேரித் தென்சிறகில்..எண் வீடு" - "தெற்கில் தளிச்சேரி வட சிறகில்..எண் வீடு" என்றாங்குச் சிறகுகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

விசயநகரப் பேரரசின் கோனேரிராய மகாராயன் காலத்தில் (கிபி1490) குடந்தைக் கல்வெட்டு ஒன்றில் சன்னதி தெருவில் வடசிறகில் இராயர் முன்பாலத்து நாச்சிமனைக்குக் கிழக்கு" என்றும், தென்னார்க்காடு மாவட்டம் சம்பையிலுள்ள, விசயநகர மன்னன் அச்சுதப்ப மகாராயன் காலத்திய கல்வெட்டு ஒன்றில் "கட்டளையிட்ட மானியம் புதுத்தெருவில் சம்பந்த நயினார் கோயிலுக்குக் கிழக்குத் திருவீதியில் தென்சிறகில் அறுபதடி மனையொன்றும்" எனச் சிறகு தெரு மருங்கைத் தெளிவுறுத்தி நிற்கக் காண்கிறோம். இத்தகைய கல்வெட்டுச் செய்திகள் இன்னும் பலவுள.

** தளிச்சேரியாவது தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் நாட்டியம் ஆடும் பொருட்டுப் பல்வேறு பகுதிகளிலிருந்து அழைத்துக் கொண்டு வரப்பெற்ற தலைசிறந்த நாட்டிய மகளிர் நானூற்றுவருக்குப் பேரரசன் இராசராசன் அமைத்துக் கொடுத்த குடியிருப்பு. இதிலிருந்த இருபெருந் தெருக்களும் தெற்குத் தளிச்சேரி, வடக்குத் தளிச்சேரி எனப் பாகுபடுத்தி வழங்கப்பட்டன. வீடுகள், எண்ணிடப்பட்டிருந்தன. வீடுகளில் குடியமர்ந்த பெண்களின் பெயரும் வீட்டு எண்ணும் தெருவின் பக்கமும் கல்வெட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.*

நேரா நேர்ச்சியாகச் சில தெருக்களில் ஒரு பக்கம் மட்டுமே வீடுகள் அமைந்திருப்பதும் உண்டு. அது 'ஒரு சிறகுத் தெரு' எனப்படும்.

தென்னார்க்காடு மாவட்டம் செய்யாறு வட்டம் திருப்பனங்காட்டுக் கல்வெட்டில் "ஆலால சுந்தரன் திருவீதிக்கு மேலை ஒரு சிறகன் திருவீதியில்..." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி.19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'திருவாங்கூர் அரசின் ஒழுகுகள்' என்னும் ஆவண ஓலைகளுள் ஒன்று "தெற்கு மாகலி கடையில் வடக்குச் சிறகில் நிற்கும் கல்லுப்பலகை" என்னும் வரிகளைத் தாங்கியுள்ளது. இதனால் சிறகின் தொடர்ச்சியான வழக்கையறியலாம்.

இனி, ஆங்கிலத்தில் பறவையின் இறக்கையைக் குறிக்கும் 'wing' என்னும் சொல் பக்கம் என்னும் பொருளில் 'South wing', 'North wing' என்றாற் போலத் தெருமருங்கைத் தெளிவுறக் குறிப்பது தமிழிலுள்ள சிறகின் வழக்கை யொத்ததே.

ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட நம் சிறகு இற்றை நாளில் நம்மை விட்டுப் பறந்து போய்க்கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்! ●

(20-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே அங்கே எழுகிறது-
மொகு மொகு புதுத்தளிர் எழுகிறது!
வேகமாம் இலை எடுத்து
வீரமாம் மலர் சிரித்த
வேங்கைத் தமிழர்களின் வாழ்விலே
மறுதளிர்ப்புச் சிறகடித்தது-
மானத் தமிழ்வாழ்வு நடை எடுத்தது!

இதுதான் இன்றைய தமிழ் ஈழத்தின் சித்திரம்; அந்த இளைய வீரர்கள், தங்கள் தன்மானத் தூரிகை கொண்டு அன்றாடம் எழுதிவரும் வரலாற்றுச் சித்திரம்.

எனவே உறுதிகொள்ளுங்கள்!

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை
தமிழன் சீர்த்தி தாழ்வதில்லை! ❋

பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சிகள்

(நம் ஐயா பாவலரேறு அவர்களுக்கு வீரவணக்கம் நிகழ்ச்சியாகவும், நினைவேந்தல் நிகழ்ச்சியாகவும் பல்வேறு பகுதிகளில் பல்வேறு அமைப்புகள் கூட்டங்கள் நடத்தின. அவற்றில்'தென்மொழி'க்கு அனுப்பப்பெற்ற கூட்ட நிகழ்ச்சிச் செய்திகள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்படுகின்றன.)

* **கோபிச் செட்டிபாளையத்தின்,** தமிழ்ச் சான்றோர் பேரவை கடந்த 14-6-1995- அன்று 'தனித்தமிழ் அறிஞர், பைந்தமிழ் அரிமா பாவலரேறு பெருஞ்சித்திரனார் மறைவு- இரங்கல் கூட்டத்தை நடத்தியது. திருவாளர்கள் தென்மொழி க.தமிழப்பன் தலைமையேற்ற அந்நிகழ்ச்சியில் பேரா. கா. அரங்கசாமி, முனைவர், செசுபழனிச்சாமி, பேரா. அ. கோவிந்தசாமி, வழக்கறிஞர் குச. ஆனந்தன்-உட்பட பலர் ஐயா அவர்களின் நினைவு கூர்ந்து பேசினர்.

* **திருப்பூர்** தமிழ்இலக்கிய மன்றம் 15.6.95 அன்று நம் ஐயா அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தி ஊர்வலம் நடத்தியும், இரங்கல் உரை நிகழ்ச்சியும் நடத்தின. திருவாளர்கள் தென்மொழி துரையரசன், தென்மொழி மாசிலாமணி, மு.துரைசாமி, ஆகியோருடன் பேராயக்கட்சி, தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க, அ.தி.மு.க. கட்சிகளைச் சார்ந்தோரும் பிற தமிழ் மன்றச்சாலைகளைச் சார்ந்தோரும் இரங்கலுரையாற்றினர்.

* **சிவகிரி** தமிழ் மைந்தர்கள் ஒருங்கிணைப்புக் குழு ஐயா அவர்களுக்கு இரங்கல் ஊர்வலம், கூட்டத்தை 23.6.95 அன்று நடத்தியது. தி.மு.க., ம.தி.மு.க., ஐ.பொ.க, தி.க. கட்சியினரும் பு.இ.மு. தோழர்களும் கலந்து கொண்டு இரங்கலுரையாற்றினார்.

* **கூடலூர்** புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர்கள் ஐயா அவர்களுக்கு இரங்கல் கூட்டத்தைக் கடந்த 25.6.95 அன்று நடத்தினர்.

* **காரைக்குடி-** புரட்சிகர இளைஞர் முன்னணியினர் ஐயா அவர்களுக்கு வீரவணக்கப் பேரணியையும், அஞ்சலிக் கூட்டத்தையும் 26-6-95 அன்று நடத்தினர். தமிழ்க்கனல் (பு.அ.மு.) தலைமையேற்ற அக்கூட்டத்தில் தி.மு.க.தி.க.பா.ம.க. ம.தி.மு.க., இ.பொ.க., சனதா தளம், குடியரசுக்கட்சி, போன்ற கட்சியினர்களோடு பல தமிழ் அமைப்புக்களைச் சார்ந்தோரும் ஐயா அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி உரையாற்றினர்.

* **ஈரோட்டில்** கடந்த 25-6-95 அன்ற ஐயா அவர்களுக்கு வீரஅஞ்சலிக் கூட்டம் நடத்தப்பெற்றது. கூட்டத்திற்கு பாவலர் அரசமாணிக்கனார் (உ.த.மு.க.) தலைமை தாங்கினார். புலவர் தமிழ்மாறன் எழுச்சியுரையாற்றினார், தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., முசுலிம்லீக், தி.க.உட்பட பல இயக்கத்தினரும் கலந்து கொண்டு பேசினர்.

* **திருச்சியில்** திருக்குறள் பயிற்சிமன்றம் கடந்த 29-6-95 அன்று ஐயா அவர்களுக்கு நினைவு அஞ்சலி கூட்டத்தை நடத்தியது. பாவலர் சிங்காரவேலன் தலைமை தாங்கிய அக்கூட்டத்தில் பல்வேறு கட்சிகள், அமைப்புகளைச் சார்ந்தோர் கலந்து கொண்டு இரங்கலுரையாற்றினர்.

* **கூடலூர்** பகுதி அனைத்துத் தமிழ் அமைப்புகள் சார்பில் ஐயா அவர்களுக்கு இரங்கல் கூட்டம் 1-7-95 அன்று நடத்தப்பெற்றது. பல்வேறு அமைப்பினரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

* **திருநெல்வேலி** உலகத் தமிழின முன்னேற்றக்கழகம் ஐயா அவர்களுக்கு இரங்கல் கூட்டத்தை 1-7-95 அன்று நடத்தியது. திரு. அதியமான் அவர்கள் தலைமையேற்ற அந்நிகழ்ச்சியில் பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

* **பாளையங்கோட்டையில்** கடந்த 2-7-95 அன்று ஐயா அவர்களின் இரங்கல் கூட்டத்தை தனித்தமிழ் இலக்கியக் கழகம் நடத்தியது. பேரா பா. வளன்அரசு தலைமையில் திருவாளர்கள் செ. பிரமசக்தி, தொபரமசிவன், காளிமுத்து, சிகமணி ஆகியோர் நிறைவுரை யாற்றினர்.

* **குடந்தை** அறிவியக்கப் பேரவை சார்பில் 1-7-95 அன்று பேரா. சாலை இளந்திரையன் தலைமையிலும், பேரா. சாலினி இளந்திரையன் முன்னிலையிலும் ஐயா பாவலரேறு அவர்களின் நினைவு இரங்கல் கூட்டம் நடந்தது.

* **சென்னையில்** பெரியார் நூலக வாசகர் வட்டம், ஐயா பாவலரேறு அவர்களை நினைவுகூர்ந்து 6-7-95 அன்று நடத்தியது. பேரா நாஇராமநாதன் பேரா. அ. இறையன் ஆகியோர் உரையாற்றினர்.

* **கல்பாக்கம்** தமிழ் உணர்வாளர்கள் கடந்த 9-7-95 அன்று ஐயா பாவலரேறு அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்தியது. திருவாளர் மாசெதமிழ்மணி அவர்கள் ஐயா அவர்களின் நினைவு போற்றிப் பேசினார்.

* **கோவையில்** அனைத்துத் தமிழர் இயக்கங்கள் பாவலரேறு ஐயா அவர்களின் இரங்கல் ஊர்வலத்தையும் நினைவு ஏந்தல் கூட்டத்தையும் கடந்த 15-7-95 ஒருங்கிணைத்திருந்தது. திரு. இரணியன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பேரா. அப்துல் காதர், கோவை ஞானி, பாவலர் கனலின்மைந்தன், கு. இராமகிருட்டிணன் ஆகியோருடனும் உதமுக, தமிழ்-தமிழர் இயக்கம், தநாமாலெக. தலித்சேனா, தமிழர் தேசிய இயக்கம் மற்றும் பல்வேறு இயக்கத்தினர் இரங்கலுரையாற்றினர். ஊர்வலத்தை எழுச்சியுற நடத்தியிருந்தனர்.

* **சென்னிமலை** புரட்சிகர இளைஞர் முன்னணியினர் ஐயா பாவலரேறு அவர்களின் நினைவுஏந்தல் பொதுக்கூட்டத்தை 15-7-95 அன்று நடத்தினர். திருவாளர் முகிலன் தலைமையில் திருவாளர்கள் தமிழ்மாறன், கிவே. பொன்னையன், அரசமாணிக்கனார் ஆகியோர் உரையாற்றினர்.

* **வேலூர்** தமிழ்- தமிழர் இயக்கம் சார்பில் கடந்த 15-7-95 அன்று ஐயா பாவலரேறு அவர்களின் நினைவு கூட்டம் நடந்தது. திரு. சோலைப்பிரியன் தலைமையில் திருவாளர்கள் தியாகு, பாவலர் இக்பால் ஆகியோருடன் பல்வேறு அமைப்பினர் கலந்து கொண்டு வீரவணக்க உரையாற்றினர்.

* **குமாரபாளையம்** தமிழ்ச்சங்கம் பாவலரேறு ஐயா அவர்களின் நினைவு ஏந்தல் நிகழ்ச்சியை 16-7-95 அன்று நடத்தியது. புலவர் திரு அரசமாணிக்கனார் தலைமையில் பாவலர் நிறைமதி முன்னிலையில்

கூட்டம் நடந்தது. பாவலர் இராமநாதன், ஐயா அவர்களின் திருஉருவப்படத்தைத் திறந்துவைத்தார். புலவர் தமிழ்மாறன் பசுப்பண்ணன், முகந்தசாமி உட்பட பல்வேறு அமைப்பினர் கூட்டத்தில் கலந்து கொண்டு வீரவணக்க உரையாற்றினர்.

* **ஈரோடு** புரட்சிகர இளைஞர் முன்னணியினர் 20-7-95 அன்று பாவலரேறு ஐயா அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்தினர். புலவர்அரசமாணிக்கனார் தலைமையில் திருவாளர் இராவணன், பொன்னையன், அமுதன், பாரி, ஆகியோர் வீரவணக்க வுரையாற்றினார். திரு.பொ.வெ. இராமாநுசம், பாவலரேறு ஐயா அவர்களின் படத்திறப்பு செய்தார்.

* **சென்னை** - அசோக் இலேலண்டு பைந்தமிழ்ப் பாசறை கடந்த 21-7-95 அன்று பாவலரேறு ஐயா அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியை நுழைவாயிலில் நடத்தியது. பாவலர் தென்முகநம்பி தலைமையில் பேராசிரியர் தீரன் (பா.ம.க.) வீறுரையில் தி.மு.க. மதி.மு.க., தி.க., பா.ம.க., வலம்புரி இலக்கியச் சோலை செந்தமிழ்ச் சோலை ஆகிய அமைப்புத் தோழர்கள் வீரவணக்கவுரையாற்றினர்.

* **சென்னை** - அசுத்தினாபுரம் தமிழ்த்தேசிய ஈகி.சங்கரலிங்கனார் தமிழ்மன்றத்தினர், பாவலரேறு ஐயா அவர்களின் நினைவுஏந்தல் நிகழ்ச்சியை 22-7-95 அன்று நடத்தினர். திரு. சுரேசுகுமார் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் திருவாளர்கள் மா.செதமிழ்மணி, தமிழ்வாணன், சீராளன், ஆகியோர் கலந்து கொண்டு தெருமுனைக் கருத்துப் பரப்பு செய்தனர்.

* **கரூர்** தமிழ்மக்கள் பேரவை 23-7-95 அன்று நடத்திய முப்பெரு விழாவிற்கு 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் திடல்' எனப் பெயரிட்டு அவ்விழாவை நடத்தியது.

* **கரூரில்** பகுத்தறிவாளர் கழக ஆசிரியர் அணி பாவலரேறு ஐயா அவர்களின் இரங்கற்பா அரங்கத்தை 23-7-95 அன்று நடத்தியது. பாவலர் அ.கன்னியப்பன் தலைமையில் பாவலர்கள் துரையரசன், ககார்முகில், கருவூர்பாரி, கடவூர் மணிமாறன், பஎழில்வாணன் ஆகியோர் இரங்கற்பா பாடினர்.

* **சென்னை** - துரைப்பாக்கத்தில் ஐயா பாவலரேறு அவர்களின் நினைவேந்தல் தெருமுனை நிகழ்ச்சி 23-7-95 அன்று நடந்தது. புலவர் திரு. இறைக்குருவனார் உரையாற்றவும் திருசுசீவானந்தம் தலைமை தாங்கவும் ஆன நிகழ்ச்சியில் பல அமைப்பினரும் கலந்து கொண்டு பேசினர். நிகழ்ச்சியை தாய்த்தமிழ் மன்றம், தொழிலாளர் தமிழ் அரங்கினர் ஆகிய அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தன.

* **சென்னை** தாம்பரம் இலக்கிய வட்டத்தினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியை 25-7-95 அன்று நடத்தினர். திரு. கி. கரிபால்டி தலைமையில் பேராசிரியர்கள் சுப.வீரபாண்டியன், கு.அரசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

பாவலரேறு சிறப்பியல்
கருத்தரங்கம் - பாவரங்கம்

1-10-95 - மதுரை

'பாவலரேறு சிறப்பியல் கருத்தரங்கம் - பாவரங்கம்' நிகழ்ச்சி தி.பி. 2026 கன்னி 14 ஞாயிறு (1-10-95) அன்று மதுரையில் நடைபெறுகிறது.

மதுரையில் பெரியார் பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள ஆரத்தி விடுதியில் 1-10-95 பிற்பகல் 2 மணியளவில் தென்மொழி ப. **துரையரசன்** தலைமையில் கருத்தரங்கம் தொடங்குகின்றது.

தலைவரை முன்மொழிந்து தென்மொழி ப. **முருகவேளும்,** வழிமொழிந்து பேசுகின்றனர். **இரா. கழராம்பன்** வரவேற்புரையாற்றுகிறார்.

சொல்லாய்வு அறிஞர் **அருளியார்** 'பாவலரேறு - பாவலர் ஏறு' என்னும் தலைப்பிலும், அறிஞர் **குணா** 'பாவலரேறு பொதுமையாளர்' என்னும் தலைப்பிலும் உரையாற்றுகின்றனர். 'பாவலரேறு இனநலப் போராளி' என்னும் பொருள்பற்றி முனைவர் கடலூர் ப. **மணிமாறனும்,** 'பாவலரேறு மெய்யியலாளர்' என்னும் பொருள்குறித்து முனைவர் **அரசேந்திரனும்** உரை நிகழ்த்துகின்றனர்.

தொடர்ந்து **புலவர் இறைக்குருவனார்** தலைமையில் நடைபெறும் பாவரங்கில் பாவலர்கள் **இன்குலாப், தமிழேந்தி, கருவூர் பாரி, தரங்கை பன்னீர்ச் செல்வம், இளஞ்சித்திரன், முல்லைவாணன், நாவைசிவம், ப. எழில்வாணன், கனலின் மைந்தன், திருமாவளவன், அறிவுமதி, பல்லடம் மாணிக்கம், நிறைமதி, இளங்கோவன்** ஆகியோர் பங்கேற்கின்றனர்.

பல்வேறு அமைப்புகளின் ஒருங்கிணைப்பில் தென்மொழி அவையம் நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

14-10-95 - திருச்சி

பாவலரேறு சிறப்பியல் கருத்தரங்கம் - பாவரங்கம் நிகழ்ச்சி தி.பி. 2026 கன்னி 27 காரி (சனி) (14-10-95) அன்று திருச்சித் தமிழ்ச்சங்கக் கட்டடத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் தலை சிறந்த பாவலர்களும் தமிழறிஞர் பெருமக்களும் பங்கேற்கின்றனர்.

தென்மொழி அவையம், பல்வேறு அமைப்புகளின் ஒருங்கிணைப்பில் நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

கண்ணீர் மடல்கள்

❐ பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும், தமிழ் நாட்டிற்கும் மேலும் உலகத் தமிழின மக்களுக்கும் தொண்டாற்றிய பெருமைக்குரியவர்; எவர்க்கும் அஞ்சாமல், தளராமல் தொடர்ந்து அரும்பணி ஆற்றியவர்.

தருமபுரி மாவட்ட மதுவிலக்குக் குழு அரூர் **அ.சாமிக்கண்ணு**

❐ ஐயா அவர்களின் திண்ணிய எண்ணங்கள் அனைத்தும் செயல்வடிவம் பெற்றுத் தமிழும் தமிழரும் தமிழ்நாடும் தலைநிமிர்ந்து, தன்மானம் காத்து நடக்கும் சூழ்நிலை விரைவில் வருவதாக! அவர்களின் உணர்வுகள் நமக்கெல்லாம் வழிகாட்டுவனவாக!

தலைவர், கல்லைத் தமிழ்ச்சங்கம் **- புலவர் செ.வரதராசன்**
கள்ளக்குறிச்சி.

❐ தமிழக வரலாற்றில் ஐயாவின் பெயர் என்றென்றும் நின்று ஒளிவீசும். அய்யாவின் மறைவால் துயருறும் தங்களுக்கும் என் உடன் பிறப்புகளுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு ஆறுதல் பெறுமாறும் வேண்டுகிறோம்.

பழனி. **- பேரா. முனைவர். ப. காளிமுத்து.**

❐ எத்தனை முறை சிறை சென்றாலும் தமிழுக்காகவும், தமிழர் நலத்துக்காகவும், தமிழ் மீட்புக்காகவும் சிறை சென்றமையால் ஐயா தளர்ச்சி அடையவில்லை. தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாடுபடுவதே நாம் அவருக்குச் செய்யும் கடமையாகும்.

திருப்பராய்த்துறை. **- நா. அன்புச் செல்வன்.**

❐ பெரியாருக்குபின் துணிச்சலுடன் வலம் வந்த தமிழ்ப் பெரியார் விதைத்திருக்கும் வித்துகள் வீணாகாமல் செழிக்கச் செய்வதே அவர்க்கு நாமாற்றும் கடன்.

தாராபுரம். **-த.வென்றி.**

❐ ஏறுபோல் பீடுநடை கொண்டு, இன்னுயிர் மொழிக்கும் நாட்டிற்கும் இனத்திற்கும் மாறுபாடு இல்லாத மனத்திட்பத்தோடு தொண்டாற்ற இனி யாருளர்?

பள்ளிப்பாளையம். **-சி.கைலாசம்.**